‘சோபா மாடல்’ அரசு முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து –இன்று

# நாகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

நாகை, செப். 12 –

முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து இன்று (12.9.2026) நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் நாகை புதிய பேருந்து நிலையம் அவுரித்திடலில் காலை 10.00 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் அறிவிப்பு:

இது குறித்து நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு



சினிமா மோகம், கவர்ச்சி மூலமாக மக்களை மயக்கி, போலியான பிம்பத்தை சமூக ஊடகங்களின் மூலமாகக் கட்டமைத்து குழந்தைகளை ஏமாற்றி குடும்ப த்துக்குள் குழப்பங் களை ஏற்படுத்தி – போலி வாக்குறுதிகள் அளித்து ஆட்சியைக் கைப்பற்றி அதுவும் ஆட்சி அமைக்கும் வலிமையைப் பெறமுடியாத மைனாரிட்டி நிலைமை என்பதால் தி.மு.க. கூட்டணியில் வென்றவர்களுக்கு அமைச்சர்கள் பொறுப்புகளைக் கொடுத்து அவர்களது ஆதரவைப் பெற்று அ.தி.மு.க. சார்பில் வென்றவர்களுக்கும் அமைச்சர் பதவி தருவதாக ஏமாற்றி குதிரை பேரம் நடத்தி, முதலமைச்சராகியிருக்கிறார் நடிகர் விஜய் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத நிலையில் திராவிட மாடல் ஆட்சி மூலமாக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை நிறுத்தினார். நிறுத்த முடியாத திட்டங்களுக்கு பெயரை மாற்றி, ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைச் சிறப்பாகச் செய்து வருகிறார். கொலை கொள்ளை அதிகமாகி விட்டது. போதைப் பொருள் நடமாட்டமும் பாலியல் வன்முறையும் அதிக மாகிவிட்டது.

பல்வேறு குற்றச்செயல்க ளில் த.வெ.க. நிர்வாகிகளே சிக்கி வருகிறார்கள். அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவர்களை பாதுகாக்கும் வேலையில் ஈடுபடுகிறார்கள். ‘தெரியாமல் ஓட்வேலையில் ஈடுபடுகிறார்கள். ‘தெரியாமல் ஓட்டுப் போட்டுவிட்டோம்’ என்று மக்கள் வருந்திச்சொல்லி வருகிறார்கள். இதில் இருந்து திசை திருப்புவதற்காக தனது டயலாக் சூட்டிங் மேடையாக தமிழ்நாடு சட்டமன்றத்தை முதலமைச்சர் மாற்றி விட்டார். அரசியல் உலகில் அரு வெறுப்பான உரையாற்றினார் சட்டமன்றத்தில் நிர்வாக திறமையற்ற, சோபா மாடல் அரசின் முதலமைச்சரின் ஆணவப் பேச்சைக் கண்டித்து நாகை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இன்று ( 12.09.2026 – சனிக்கிழமை), காலை 10.00 மணியளவில் நாகையில் புதிய பேருந்து நிலையம் அருகே அவுரி திடலில் நடைபெற உள்ளது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாகை மாவட்டற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் , பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகி கள், நகர் மன்ற, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர், உறுப்பினர்கள் கிளை, வார்டு கழகசெயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள், உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள், உள்ளிட்ட அனைத்து நிர்வாகி களும் இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.இவ்வாறு அறிக்கையில் நாகை மாவட்ட கழக செயலாளர் என். கௌதமன் கூறியுள்ளார்.

---

சட்டமன்றத்தில் முதலமைச்சரின் ஆணவப் பேச்சு!

# நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் உதகையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

நீலகிரி, செப். 12 –

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட கழக அவை தலைவர் போஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளரும், குன்னூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.எம்.ராஜ⁶ எம்.எல்.ஏ. அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் தலைமை கழக பிரதிநிதிகள் கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளர் பிரகாஷ் MP., கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கூடலூர் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் ரவிகுமார், தமிழ்செல்வன், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர்அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் காசிலிங்கம், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர கழக செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கூட்ட முடிவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில் நன்றி கூறினார்.

**கழக முப்பெரும் விழா**

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது பிறந்தநாள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள்ஆகிய மூன்று சிறப்புமிக்க நிகழ்வுகளும் ஒருங்கிணைந்து ஒவ்வொரு ஆண்டும் ”முப்பெரும் விழாவாக தலைமை கழகத்தின் சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாண்டு, சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில், கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் செப்டம்பர் 15ம் தேதி நடைபெற உள்ளது. கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து நகரஒன்றியபேரூர்கிளை கழகங்களிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைகள் மற்றும் அலங்கரித்து வைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்களின் படங்களுக்கு மாலை அணிவித்து மரி யாதை செலுத்தியும், கழக கொடியேற்று விழா நிகழ்ச்சிகளை சிறப்புடன் நடத்துவது என தீர்மானி க்கப்படுகிறது.

**நகர ஒன்றிய பேரூர் – கிளை கழக மறுசீரமைப்பு!**

கடந்த 22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கழக நிர்வாகச் சீரமைப்பு தீர்மானத்தின்படி, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் கிளைக் கழகங்களின் நிர்வாக அமைப்புகளை மறுசீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில் மறு சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தலைமை கழக பிரதிநிதிகளாக, கழக இளைஞர் அணி மாநில துணை செயலாளர் – ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ் MP., அவர்களும், கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கழகத்தின் அடித்தளமான கிளைக் கழகங்களை வலிமையானதாகவும், ஒழுங்கானதாகவும் உருவாக்குவதற்கு இந்த நிர்வாகச் சீரமைப்பு பணிகளில் அனைத்து நிலை கழக நிர்வாகிகளும் தலைமைக் கழகத்தின் வழிகாட்டுதல்களை முழுமையாகப் பின்பற்றி, கிளைக் கழகங்களைப் பிரித்து, நிர்வாகச் சீரமைப்பு பணிகளை சிறப்புடன் செய்வது எனவும்,

நம் கழக வளர்ச்சிக்கு இந்த மறு சீரமைப்பு பணிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் எவ்வித சுணக்கமுமின்றி ஒவ்வொரு கழக நிர்வாகிகளும் இப்பணிகளை மேற்கொண்டு தலைமை கழக பிரதிநிதிகள் மூலம் தலைமை கழகத்தில் ஒப்படைப்பது எனவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்போம்!**

முதல்வர் விஜய், அவரது உரை மூலமாக சட்டமன்றத்தின் மாண்பு , மரபு வரலாறு இவை அனைத்தும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதை பார்த்தால், படங்களாக அந்த அவையில் நிற்கும் தலைவர்கள் தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்திருப்பார்கள். சில அமைச்சர்கள் சட்டமன்றத்தில் தான் பேசுவது தவறு என்று தெரிந்தே பேசி, ‘மீம்ஸ்’, ‘ரீல்ஸ்’ஐ வெளியிடுகிறார்கள். நேரலை மூலமாக மக்களை சென்றடைந்த பிறகு அதை ஒப்புக்கு அவைக்குறிப்பில் இருந்து நீக்கிக் கொள்கிறார்கள். இப்படியாக தந்திர மேடையாக சட்டசபையை த.வெ.க. அரசு பயன்படுத்துகிறது.

நிர்வாக திறமையில்லாத ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார்.

இவரது இந்த அருவருக்கத்தக்க பேச்சை கண்டிக்கும் வகையில், இன்று (12.09.2026 சனிக்கிழமை) காலை தி.மு.க. சார்பில் அனைத்து வருவாய் மாவட்ட தலைநகரங்களில் மாவட்டக் கழக செயலாளர்கள் தலைமையில் ”மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமை கழகம் அறிவித்துள்ளது.

அதன்படி, நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (12.9.2026 – சனிக்கிழமை) காலை 11 மணியளவில், உதகை ஏ.டி.சி ஜீப் நிறுத்தம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறஉள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள், அனைத்து ஒன்றிய நகர பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளில் உள்ள நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல்வீரர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்வது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். ஸ்ரீதர்**
**செப்டம்பர் 12 (2020)**



**தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# நம் தலைவரின் வரலாறு காக்கைகள் கரைவதால் மறையாது!

# ஆணவம் பிடித்த விஜய்யின் கூட்டம் விரைவில் வீழ்வது உறுதி!

ஒன்றியங்களை, பேரூர், பஞ்சாயத்துக் கிளைகளை இழக்காமல் பிரிக்க வேண்டும். அடுத்த 10 நாளில் பட்டியல் வேண்டும் என்கிற பணி கழகத் தலைவரின் அறிவிப்பின்படி தற்போது தீவிரமாக, பரபரப்போடு நடைபெற்று வருகிறது.

தலைவர் தளபதி உறுதி அளித்திருக்கிறார். யாரையும் விடமாட்டோம்.

ஒரு வீட்டில் மரிக்கொழுந்தும் வேண்டும். மல்லிகையும் வேண்டும். மனோரஞ்சிதமும் வேண்டும்.

கொழுந்திலே வாசம் வீசுவது மரிக்கொழுந்து. மொட்டிலேயே வாசம் தருவது மல்லிகை. காய்ந்தும் மணம் தருவது மனோரஞ்சிதம். அதுபோல இளைஞர்களும் வேண்டும். எங்களைப் போல. நடுத்தர வயதினரும் வேண்டும். 70 வயதுக்கு மேலே உள்ள அனுபவம் வாய்ந்தவர்களும் வேண்டும். அவர்களின் வழிகாட்டுதல்தான் கட்சியை உயர்த்தும்.

யாரையும் தலைமை விட்டு விடாது. தனக்குத் திருமணம். பொன்விழா, மணிவிழா, வைரவிழா, பவள விழா என எடுக்கும்போது தம்பி தங்கைகளுக்கும் திருமணம் செய்து பார்க்க ஆசைப்படுவது போலத்தான் இளைஞர்களுக்கு முடிசூட்டு விழா. கழகத்தலைவர் எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவோம்.

இது இளைஞர்களிடமே ஒப்படைப்போம் என்பது அல்ல. இளைஞர்களுக்கும் வாய்ப்பு அதிகமாகக் கொடுப்போம்.

தமிழ்நாட்டை மாற்ற வந்த உடைமாற்றி விஜய்யின் அட்ராசிட்டிக்கு அளவில்லை. மாபெரும் தலைவர்கள் அறிஞர்கள் அமர்ந்த இடம் இப்போது அசிங்கப்படுகிறது.

கிராமத்தில் செட்டி கெட்டால் பட்டுவேட்டி என்பார்கள். விஜய் எதில் கெட்டார்?. வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து பட்டுவேட்டி கட்டுகிறார்.

ஜார்ஜ் கோட்டையா, விஜயின் கோட்டையா என்கிற அளவு கோட் உடை.

இதெல்லாம் உங்கள் ஜோசியரின் சேட்டையா என்று கேட்கிற அளவுக்கு!

மகாத்மா காந்தி பார்-அட்-லா மேல் நாட்டில் படித்தாலும், மேலாடை இல்லாமல் இந்தியாவில் உலாவியவர்.

தந்தை பெரியார் ரயிலிலே பயணம் செய்திட மூன்றாம் வகுப்பில் ஏறியதைப் பார்த்த ஒருவர். ஓடோடி சென்று முதல் வகுப்புக் குளிர்சாதன டிக்கெட் எடுத்து வந்து கொடுத்தார்.

கொடுத்தவரிடம் மறுப்பேதும் கூறாது. போய் வாருங்கள் என அவரை வழி அனுப்பிவிட்டு, அவர் சென்றபின் அந்தச் சீட்டை மீண்டும் கவுண்டரில் சென்று ரத்து செய்துவிட்டு வரச்சொல்லி, அந்தப் பணத்தை திருச்சி பெரியார் கல்லூரிக்கு அனுப்பி வைத்த எளிமையைத் தந்தை பெரியார் சாகும்வரை அப்படியே வாழ்ந்து காட்டியவர்.

கலைஞர். திரைப்படத்தில் கதை வசனம் எழுதினார். 1955-விலேயே சொந்தக் கார். சொந்த வீடு உண்டு. ஆனால் அதே குறுகிய வீட்டில்தான் எளிமையாக வாழ்ந்தார்.

இப்படி எளிமையாக தலைவர்கள் வாழ்ந்த தமிழ்நாட்டில், அநியாயத்துக்கு ஆடம்பரமாக விஜய் வாழ்கிறார். 300 ரூபாய்க்குத் தூவ வேண்டிய பூக்களை, 6 கோடி ரூபாய் செலவு செய்து மேட்டூர் அணையில் தண்ணீரைத் திறக்கிறார். தண்ணீரைத் திறக்கச் சொன்னால், காசைத் தண்ணீராய் இரைக்கிறார். தாமதமாகத் திறக்கப்படும் நதிநீருக்கே இந்த ஆடம்பரம்.

துப்புரவு தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்க வேண்டும். முடியாவிட்டால் இயலாமையை ஒப்புக்கொள்ள வேண்டும். அதை விடுத்து தி.மு.க. வழித்து எடுத்துச் சென்றுவிட்டது என எப்படி த.வெ.க.வினர் கூறலாம்?

நிதி இல்லாத சூழலில் 1,200 கோடிக்கு புது சட்டசபைக் கட்டிடம் எதற்கு? 843 உறுப்பினர்கள் கொண்ட புதிய நாடாளுமன்றத்திற்கு 800 கோடிகள்தான் செலவு. ஆனால் 234 பேர் அமரும் சட்டமன்றத்துக்கு சட்டமன்றம் அமைய 1,200 கோடியா செலவு?

ஒவ்வொரு முறையும் விஜய் விமான பயணத்திற்குச் செல்ல தனி விமானத்திற்கு கோடிக்கணக்கில் செலவு ஏன்?

அண்ணா, எம்.ஜி.ஆர்., என்.டி.ஆர். இப்படித்தான் ஊதாரித்தனமாக அரசுப் பணத்தை செலவு செய்தார்களா?

எம்.எல்.ஏக்களுக்கு பல கோடியில் எதற்குக் கார்? டிரைவர் சம்பளம். பெட்ரோல் அலவன்ஸ் தேவையா? இந்தியாவில் எங்காவது உண்டா? இந்திய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டா?

மழை அளவோடு பெய்தால் மழை, அதிகமாக பெய்தால் பிழை.

செலவு செய்ய வேண்டும். அதற்கும் ஓர் அளவு வேண்டாமா? அடுத்தவர்களைக் குறை கூறுவதையே வாழ்க்கையாக இல்லாமல் ஆட்சியை நடத்த வேண்டும்.


கழகத்தலைவர் தளபதி. எடப்பாடி ஆட்சியில் கொரோனா நேரத்தில் தலா 5000 ரூபாய் ரேஷன் கார்டுக்கு கொடுக்கும்படி கேட்டார். ஆனால் எடப்பாடி 1,000 ரூபாய் மட்டுமே தந்தார். பின்னர் தளபதி ஆட்சிக்கு வந்தவுடன் கொரானா நிவாரணமாக ரேஷன் கார்டு ஒன்றுக்கு தலா 4.000 ரூபாய் வழங்கினாரே தவிர மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டிருக்க



வில்லை.

நடிகராக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.. முத்தமிழறிஞர் மு. கருணாநிதி, ஜெயலலிதா அனைவரும் இருந்த அறையினை மாற்றி அதற்கு 5 கோடி செலவு செய்யும் விஜயினை நாடு தாங்காது.

ஒரு புத்திசாலி தலைவன் இருக்கும் கூட்டத்தில் பத்து முட்டாள் இருந்தாலும் வெற்றி பெறலாம். ஒரு முட்டாள் தலைவன் இருந்து சுற்றியுள்ள அமைச்சர்கள் புத்திசாலியாக இருந்தாலும் ஜெயிக்கும். தலைவனும் முட்டாள் அமைச்சர்களும் முட்டாள் என்றால் வெல்லாது. வென்றாலும் அந்தக் கூட்டம் நீண்ட நாள் நீடிக்காது என்பது பழமொழி அந்த மூன்றாவது கூட்டம்தான் இந்த விஜய் கூட்டம். அதனால்தான் சொல்கிறேன் வீழ்வது விஜய் ஆட்டம். வெல்லப்போவது தளபதியின் கூட்டம் என்று.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

இங்கே ஆண்டிபட்டியில் பேசிய எம்.எல்.ஏ. மகாராசன், மூன்று முறை வென்று சட்டமன்றம் சென்று கொண்டிருப்பவர். சட்டமன்றம் போகவே வெட்கமாக இருக்கிறது என்று பேசினார். கம்பம் செல்வேந்திரன் தி.மு.க. பழைய வரலாறுகளைச் சுட்டிக்காட்டி ஆளும் கட்சியை வெட்கப்பட வைத்திருக்க வேண்டும் என்றார்.

நீங்கள் நினைப்பது போல் சபாநாயகர் J.C.D. பிரபாகர் நியாயமானவர் அல்ல. பசுத்தோல் போர்த்திய புலி. மற்றவர்கள் பேசினால் நியாயத் தராசினை பிடிக்கும் சபாநாயகர், முதல்வர் பேசும்போதெல்லாம் குஞ்சினைக் காப்பாற்றும் பறவையைப் போல் போர்த்திப் பாதுகாக்கின்றார்.

J.C.D. பிரபாகர் நடிப்பால், நம் தரப்பிலிருந்து பல விஷயங்கள் வெளிப்படுத்த முடியாமல் போகிறது.

வளர்ந்து கெட்டவன். “மதுவைக் கொண்டு வந்ததே தி.மு.க.தான்” என்கிறார். நம்மவர். ‘தி.மு.க. தான் கொண்டு வந்தது. தி.மு.க.வே மதுவை மூடியது” என்று முற்றுப்புள்ளி வைக்கிறார்.

“கள்” மது வகை இல்லை என்றால் திறக்கலாமே. “கள்” மது என்பது உண்மைதானே, அதனால்தானே கள்ளினைத் திறந்துவிடாது இருக்கிறோம். அந்தக் கள் காங்கிரஸ் ஆட்சியில் கரை புரண்டு ஓடியது. அப்படி ஆனால் காங்கிரஸ்தானே முதலில் மதுவைக் கொண்டு வந்தது?

அதன்பின் எம்.ஜி.ஆர். இருந்த தி.மு.க. 1971-ல் கள்ளச்சாராயத்தைத் தடுக்க, சுற்றிலும் நெருப்பு நடுவில், கற்பூரமாக இருக்க வேண்டாம் என முடிவு எடுத்து, எம்.ஜி.ஆர். இருந்த தி.மு.க சாராயத்தைக் கொண்டு வந்தது.

ஆனால் எம்.ஜி.ஆர். இல்லாத திமுக 1974-ல் சாராயத்தை மூடியது.

அதன் பின் 1980-ல் சாராயம், பின் உயர் ரக மது பானம் வந்தது எம்.ஜி.ஆர். ஆட்சியில், டாஸ்மாக் (TASMAC) கொண்டு வந்ததே எம்.ஜி.ஆர். தான்.

அரசு நடத்த வேண்டிய கல்விச் சாலைகளைத் தனியாரும், தனியார் நடத்த வேண்டிய சாராயக்கடைகளை அரசாங்கமும் நடத்துவது என்கிற கொள்கையை அமல்படுத்தியது ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசு.

பாவம் ஒரு இடம். பழி ஒரு இடம் எனக் குறுக்குவழி கண்ட இயக்கம் எப்போதும் நம்மீது கறையைத் தெளிக்கிறது. அதை நாம் எடுத்துச் சொல்ல வேண்டும்.

காலம் ஒரு நாள் மாறும், நம் கவலைகள் யாவும் தீரும். அப்போது அசாமில் ஆரம்பிக்கப்பட்ட அசாம் கனபரிஷத் கட்சியும், அதன் முதல்வர் மெஹந்தாவும் இன்று காணாமல் போனது மாதிரி, த.வெ.க.வினரும் காணாமல் போய்விடுவார்கள்.

காக்கைகள் கரையும் மறையும். கார்மேகம் மறையாது. ஊதினால் காடா விளக்கு அணையும். கதிரவன் அணையாது. பல நூற்றாண்டு ஆனாலும் தலைவர் தளபதி புகழும் மறையாது.